**<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>**

**<u>O.S.No.241/2018</u>**

2022-ம் ஆண்டு ஜீன் மாதம் 28-ஆம் நாள் பி.வா.சா. 4 சாட்சி திருமதி.சாந்தி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.சாந்தி | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**<u>பி.வா.சா. 4 முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணம் எதற்க்காக எழுதப்பட்டது என்றால் தெரியாது. இடம் வாங்குவதற்க்காக அக்ரிமெண்ட் எழுதினோம், பின்னிட்டு வேண்டாம் என்று ரத்து செய்துவிட்டு நான் என் பணத்தை வாங்கிகொண்டேன். பி.வா.சா.ஆ.7 கடனுக்காக எழுதப்பட்டது என்றால் இல்லை. அக்ரிமெண்ட் எத்தனை ரூபாய் தொகை போடப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அக்ரிமெண்ட் எந்த அலுவலகத்தில் எழுதினோம் என்றால் பத்திர அலுவலகத்தில் சென்று எழுதினோம். அந்த அக்ரிமெண்ட்ல் யார் என்று சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. கிரயம் எத்தனை ரூபாய்க்கு பேசினோம் என்றால் எனக்கு தெரியாது. மகேந்திரனுக்கு நான் தான் பணம் கொடுத்தேன். நானே திரும்பி வாங்கிக்கொண்டேன். அக்ரிமெண்ட் எத்தனை ரூபாயக்கு விலை பேசினது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எத்தனை மாதத்திற்கு அக்ரிமெண்ட் போடப்பட்டது என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் ரத்து செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. 12.10.2015-ல் அக்ரிமெண்ட் ரத்து செய்ததாக இருக்கிறது என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை ஆனால் ரத்து செய்துவிட்டேன். ரத்து செய்துவிட்டு பணத்தை பெற்றுக்கொண்டதாக பி.வா.சா.ஆ.8 -ல் இல்லை என்றால் நான் பணம் பெற்றுக்கொண்டேன். மகேந்திரன் என்பவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய தொலைபேசி எண் என்ன என்றால் எனக்கு தெரியாது எனது கணவருக்கு

தான் தெரியும். என் கணவர் தாக்கல் செய்த வழக்கு விவரம் எனக்கு தெரியாது. ஆனால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக என் கணவர் சொன்னார். பி.வா.சா.ஆ.8 ரத்து செய்த அன்று என் கணவர் மீது பத்திரம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கடன் கொடுக்கப்பட்டு அதற்க்காக பி.வா.சா.ஆ-7 எழுதப்பட்டது என்றால் இல்லை. அவ்வாறு எழுதப்பட்டதால் தான் பணம் கொடுத்து பி.வா.சா.ஆ.8 எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்க்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் சரிதான். என்னிடம் அழைப்பாணை அது தான். அதில் எது சம்பந்தமாக சாட்சி சொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. **வா.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.